# தமிழ்நாடுமின்சாரஒழுங்குமுறைஆணையம்

**எண்.19ஏ, ருக்மினிலட்சுமிபதிசாலை (மார்ஷல்ஸ் ரோடு),**
**எழும்பூர், சென்னை 600 008.**

தொலைபேசி: ++91-44-28411376 / 28411378 / 28411379 நிகரி: ++91-44-28411377
**மின்னஞ்சல்:** tnerc@nic.in **வலைதளம் :**www.tnerc.gov.in


எண்.4/2013
நாள் 21–06–2013

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் மின்தொடரமைப்புக் கழகம், ஆகிய நிறுவனங்கள் 2013 பிப்ரவரி 19 அன்று சில்லறை மின்கட்டணம் மற்றும் மாநிலத்திற்குள் மின்செலுத்தல் மின்கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்காக மின்கட்டண மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. ஆணையத்தினால் இந்த மனுக்கள், 2013 பிப்ரவரி 21 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அதனால் எதிர்கொள்ளப்படும் மின்வழங்கலில் ஏற்படும் மின்தட்டுப்பாடு மற்றும் மாநிலத்தின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையினை கருத்திற்கொண்டும் சிறிதளவு மின்கட்டண உயர்வாக ரூ.973/– கோடி விதிக்க மனு செய்தது. இது மாநில அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும், எனவே மின்நுகர்வோருக்கு கூடுதல் மின்கட்டண உயர்வு இல்லை என்றும் தெரிவித்தது.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கீழ்க்கண்டவாறு, மின்கட்டணங்களை மாற்றி அமைக்க மனு செய்திருந்தது.

(அ) தாழ்வழுத்தம் 1 B-குடிசைவகை : மாதம் ஒன்றுக்கான நிலைக் கட்டணம் ரூ.60/– லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.125/– ஆக அதிகரிக்கவும்.

(ஆ) தாழ்வழுத்தம் IV விவசாய வகை: நிலைக்கட்டணம் ஆண்டுக்கு ரூ.1750/–லிருந்து ஆண்டுக்கு ரூ.2500/– / குதிரை சக்தி அதிகரிக்கவும் மனு செய்திருந்தது.

ஆணையம் இந்த மனு மீது 2013 மே மாதத்தில், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தது. மனுக்கள் மீதான மேல்நடவடிக்கைக்காக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும்

தமிழ்நாடு தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றிடமிருந்து தேவையான விளக்கவுரையைப் பெற்றது.

பின்னர் தமிழ்நாடு அரசு, விவசாயம் மற்றும் குடிசைக்களுக்கான மின்கட்டண உயர்வுக்காக கூடுதல் மானியம் அளிக்கும் என்றும், மேலும் பிற மின்நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வரும் மானியம் தொடரும் என்றும் தெரிவித்தது.

மேற்சொன்னவற்றின் பொருட்டு, ஆணையம், மேற்சொன்ன மின்கட்டண உயர்வை ஏற்றுக்கொண்டதன் விளைவாகவும் மின்கட்டணம் மாற்றியமைக்கப்படுவதன் பொருட்டும் ரூ.964 கோடி கூடுதல் வருவாய் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கிடைக்கும்.

ஆணையம் 2013 ஜீன் 20 அன்று இரண்டு மனுக்கள் மீதும், மின்கட்டண ஆணைகள் பிறப்பித்தது.

## இரண்டு ஆணைகளின் சிறப்பியல்புகள் பின்வருமாறு:

### தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சில்லறை மின்கட்டணத்திற்கான மனு

ஆணையத்தினால் 20–06–2013 அன்று வெளியிடப்பட்ட மின்கட்டண ஆணையில், மின்கட்டணம் மாற்றியமைப்பதற்காக ஆணையத்தினால் நடத்தப்பட்ட பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் மின்நுகர்வோரால் தெரிவிக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகளில் பலவற்றை ஆணையம் அவர்களுக்கு அனுகூலமாக பரிசீலனை செய்துள்ளது. பல விவசாயிகள், தங்களுடைய (வைக்கோல், தட்டு) வெட்டும் இயந்திரம், கரும்பு பிழிதல் முதலிய வாழ்வாதாரத்திற்காக வேளாண்மை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு மின்திருட்டு வழக்கு தொடுக்கப்படுவதாக எடுத்துரைத்தனர். இதேபோன்று வீட்டு உபயோக மின்நுகர்வோரும் தற்போதுள்ள வீட்டில் கட்டப்படும் சிறிய கட்டுமானங்களுக்காக பயன்படுத்தும் மின்பயன்பாட்டிற்கும் மற்றும் குடியிருப்பு காலனிகளில்

உள்ளவர்களுக்காக பொது வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படும் மின்பயன்பாட்டிற்கும் மின்திருட்டு வழக்கு தொடுக்கப்படுவதாகவும் முறையீடு செய்தனர். மின்நுகர்வோரில் பலர்

அபரிமிதமான விளக்கொளி மின்பயன்பாட்டிற்கு மின்சேமிப்புக்காக அதிகளவு மின்கட்டணம் விதிக்கும்படியும் கூறினர்.

மின்நுகர்வோரின் கோரிக்கையை ஏற்று, வீட்டு உபயோக / குடியிருப்பு மின்நுகர்வோருக்கு ஆணையம் புதிய மின்கட்டண ஆணையில், அவர்களுடைய குடியிருப்பு இடங்களில் 2000 சதுர அடிக்கு உட்பட்ட கூடுதல் கட்டுமானப் பணிகளுக்கு உபயோகிக்கும் மின்சாரத்திற்கு வீட்டு உபயோகத்திற்கான மின்கட்டணமே செலுத்துவதற்கு வகைசெய்துள்ளது. குடியிருப்பு காலனிகளில் ஆணையம், குடியிருப்போரின் பொது வசதிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு குடியிறுப்பு மின்கட்டணமே விதிக்கப்படும் என்றும் ஆணையிட்டுள்ளது. புதிய மின்கட்டண ஆணையில், ஆணையம் இதுவரை மருத்துவர்கள், வழக்குரைஞர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட வசதிகளை, குயவர்கள் பொற்கொல்லர்கள் முதலியோருக்கும் நீட்டித்து வழிவகை செய்துள்ளது. இதேபோன்று விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஆணையம், தன்னுடைய புதிய மின்கட்டண ஆணையில் கரும்பு பிழிதல், அறுவடை, புல் வெட்டுதல், கதிரடித்தல் மற்றும் வேளாண் விளைபொருள்களை சுத்தம் செய்தல் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் மின்சாரத்தை, ஒருவழிப்பாதை மின்இணைப்பு மாற்றி மூலம் விவசாயிகள் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்துள்ளது.

அபரிமிதமான விளக்கொளியனை பொறுத்த வரையில், ஆணையம், விளம்பரகாட்டி மற்றும் விளம்பரப் பலகைகள் முதலியவற்றிற்கான மின்பயன்பாடு உள்ளடங்கலாக அபரிமிதமான விளக்கொளிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு மிக அதிகளவு மின்கட்டணத்தை விதித்துள்ளது. மின்சாரத்தை சிக்கனப்படுத்துவதற்கும், வீணடிப்பதைத் தவிர்க்கவும் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

<u>மாநிலத்திற்குள் மின் செலுத்தல் மின்கட்டணம் மற்றும் பிறகட்டணங்கள்</u>

தமிழ்நாடு மின்தொடரப்புக் கழகத்திற்காக, மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்பு முறையின் பயன்பாட்டிற்குரிய ஆண்டு மின் செலுத்தல் கட்டணங்களை ஆணையம்

நிர்ணயித்துள்ளது. ஆண்டு மின் செலுத்தல் கட்டணங்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினாலும் பிற பயன்பாட்டாளர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படும். இந்த

ஆணையில் திறந்த நுழைவுரிமைக் கட்டணங்களுங்கூட நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அமைப்புமுறை இயக்கக் கட்டணங்கள் மற்றும் எதிர்வினைபுரி மின் கட்டணங்களும்கூட குறித்துரைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஆணைகளும், 21–06–2013 முதற்கொண்டு நடைமுறைக்கு வருகின்றன. இவை 31–03–2014 வரையில் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

இந்த ஆணைகளைப் பிறப்பித்தன் மூலமாகவும், புதிய மின் திட்டங்கள் இயக்கத்திற்கு வருவதாலும், ஒழுங்குமுறை பற்றாக்குறை அரசின் ஆதரவுடன் நீக்கப்படும் என்று நம்புவதாலும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் தமிழ்நாட்டின் மின்நுகர்வோருக்கு சிறந்த முறையில் மேம்பட்ட சேவைசெய்யும் என்று ஆணையம் கருதுகிறது.

**(சி.குணசேகரன்)**
**செயலாளர்**